**கவனிக்க.**- 2008.05.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1552 - 2008 මැයි 30 වැනි සිකුරාදා - 2008.05.30
1552 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 548 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 550 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) தேசிய புடவை மற்றும் உடுதுணி நிறுவகம் சட்டமூலம் 2008, ஏப்பிறல் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) சீன வம்சாவளியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2008, மே 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்) சட்டமூலம் 2008, மே 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்**. வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, யூன் 06 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மே 23 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*கம்பனியின் பெயர் : எல். பி. டிரேடிங் (பிரைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் இலக்கம் : பிவி 63884*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008.04.22*
*கம்பனி பதிவு அலுவலகத்தின் முகவரி : இல. 495ஏ, 5 ஆம் கட்டை, பியகம வீதி, பெத்தியா கொடை, களனி.*

*செயலாளர்கள்.*

*5-476*

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.*

*கம்பனியின் பெயர் : ரஸல் சொலூஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் இலக்கம் : பிவி 63733*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008.04.08*
*கம்பனி பதிவு அலுவலகத்தின் முகவரி : 242/1, பிரதான வீதி, கொழும்பு 11.*

*செயலாளர்கள்.*

*5-477*

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆந் திகதி ஸ்கைவே என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதற்கான அறிவித்தல்**

*கம்பனியின் பெயர் : ஸ்கைவே என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் இலக்கம் : பிவி 63986*
*அலுவலகம் : 48/81, இராஜவசோதயம் சதுக்கம், கண்டி வீதி, திருகோணமலை.*

*இரா. செந்திற்குமரன்,*
*செயலாளர்.*

*2008.05.12.*

*5-483*

---

**பொது அறிவித்தல்**

***தனியார் கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்***

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் (அதிகாரச் சட்டம்) 11 (5) ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்கும் ரிக்கோஜென் லிமிட்டெட் (கம்பனி இலக்கம் N (PBS) 724 , அதிகாரச்சட்டத்தின் 29 ஆவது பிரிவுக்கு அமைய, 2008 ஏப்பிரல் 28 ஆந் திகதி முதல் ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய, கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கின்றோம்.*

*ரிக்கோஜென் (பிறைவேட்) லிமிட்டெட்*

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,*

*ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்,*
*செயலாளர்.*

*இல. 400, டீன்ஸ் வீதி,*
*கொழும்பு 10.*
*2008. மே 09*

*5-495*

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்ட பிரகாரத்தின் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்**

மேற்குறிப்பிடப்பட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்ட கம்பனியை பதிவுசெய்தல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்கள் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது:-

*கம்பனியின் பெயர் : மெல் பாம்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் பதிவு இலக்கம் : பிவி 64012*
*கம்பனி பதிவு செய்த திகதி : 06. 05.2008*
*கம்பனியின் விலாசம் : இல. 61, றொட்ரிகோ பிளேஸ், கொழும்பு 15.*

*ஜே. என்ட் ஏ. மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது.*
*கம்பனி செயலாளர்.*

*5-513*

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் விதிகளின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. என இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : டபிள்யு. ஆர். ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
பதிவு செய்யப்பட்ட முகவரி : 1, எலிபான்ஸ் வீதி, கொழும்பு
கம்பனி இலக்கம் : பிவி 63770
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008 ஏப்பிறல் 21

கம்பனியின் பெயர் : லங்கா ஸ்கன்டிக் (பிரைவேட்) லிமிட்டெட்
பதிவு செய்யப்பட்ட முகவரி : 346, லேக் சிட்டி, ஜா-எல
கம்பனி இலக்கம் : பிவி 63849
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008 ஏப்பிறல் 16

கம்பனியின் பெயர் : நிதஹஸ் சேவக வராய (பிரைவேட்) லிமிட்டெட்
பதிவு செய்யப்பட்ட முகவரி : 370, நாணயக்கார மாவத்தை ஒபேசேகபுர, ராஜகிரிய
கம்பனி இலக்கம் : பிவி 63912
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008 ஏப்பிறல் 24

புறபெசனல் அசைன்மன்ட்ஸ் அன்ட் செக்றிடெரிஸ் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2008, மே 09.

5-569

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (2) இற்கு அமைவாக பின்வரும் கம்பனிகளின் பெயர்கள் மாற்றப் பட்டிருப்பதை அறியத் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : பிரிண்ட்கெயார் (சிலோன்) PLC
கம்பனி இலக்கம் : பிகியு 75
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட விலாசம் : இலக்கம் 77, நுங்கமுகொட வீதி, களணி.
கம்பனியின் புதிய பெயர் : வரையறுக்கப்பட்ட பிரிண்ட்கெயார் தனியார் நிறுவனம்.
கம்பனியின் பழைய பெயர் : வரையறுக்கப்பட்ட யுனிவர்ஷல் பெகேஜிங் (பிரைவேட்) நிறுவனம்
கம்பனி இலக்கம் : என் (பிவிஸ்) 6359
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட விலாசம் : இலக்கம் 77, நுங்கமுகொட வீதி, களனி
கம்பனியின் புதிய பெயர் : வரையறுக்கப்பட்ட பிரிண்ட்கெயார் யுனிவர்ஷல் (தனியார்) நிறுவனம்.

மேற்கூறப்பட்ட கம்பனிகள் சார்பாக

வரையறுக்கப்பட்ட மெனேஜர்ஸ் அண்ட் செக்ரடரிஸ் (தனியார்) நிறுவனம்,
செயலாளர்கள்.

இல. 212, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10

5-615

## அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சோசலிச சனநாயக குடியரசின் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் அறியத்தருவதாவது கொங்கொங்கில் உருவாக்கப் பட்டு 29 ஆம் மாடி, விங்ஷன் சென்டர், 111 கனோட் மத்திய வீதி, கொங்கொங்கில் பதிவு அலுவலகத்தை கொண்டுள்ள வரையறுக்கப் பட்ட 'பிறிம்' (கொங்கொங்) நிறுவனத்தின் இயக்குனரான இல. 07, பேனாட் கார்டன்ஸ், 11 கிங் கெங் ஷேக் வீதி, சாய்குங் நியு டெரிடொரிசில் வசிக்கும் பிராங் புருவர் என்னும் நான் லெவல் 01, பாக்வே பில்டிங் இல. 48, பாக் ஸ்டிரிட், கொழும்பு 02 இல் வசிக்கும் அலன் பென்டன் அவர்களிற்கு 2005 தை மாதம் 10 ஆந் திகதியில் அதிகாரத்துவத்தின் மூலமாக வழங்கப்பட்ட எல்லா விதமான உரிமைகளையும் அதிகாரங்களையும் இரத்துச் செய்கின்றேன்.

பிராங் புருவர்,
(என்னால் கொங்கொங்கில் கையெழுத்திடப்பட்டது.)

5-652

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு அமைய கீழ்க்குறிப்பிடப்பட்ட கம்பனியானது கூட்டிணைக் கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது:-

கம்பனியின் பெயர் : கின்ஜோ சைனீஸ் ரெஸ்டோரட்ன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பிவி 63657
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 937, கோட்டே வீதி, எத்துள்கோட்டே.
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008, ஏப்பிறல் 01

கே. ஜே. குமார,
பணிப்பாளர்.

671

## பொது அறிவித்தல்

*தனியார் கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்*

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் (அதிகாரச்சட்டம்) 11 (5) ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்கும் பியூரிடாஸ் லிமிட்டெட் (கம்பனி இலக்கம் என் (பிஎஸ்) 599) அதிகாரச் சட்டத்தின் 29 ஆவது பிரிவுக்கு அமைய, 2008 ஏப்பிரல் 28 ஆந் திகதி முதல் ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவுக்கு அமைய, கம்பனியின் பெயர் பின்வரு மாறு மாற்றப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கின்றோம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பியூரிடாஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10
2008. 05. 09

5-496

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆணடின் 10 ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

*(கொழும்பு 12, பழைய சோனகத்தெரு, இல. 177 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கே. எம். தம்பிராஜாவின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த கொழும்பு 12 பழைய சோனகத்தெரு இல. 177 இல் அமைந்த ஆதனம்)*

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007.09.07 ஆந் திகதிய 1514 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2007.08.29 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லிநியூஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேறகுறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹெவ்லொக் றோட், கொழும்பு 5 என்னும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம 2008.06.28 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்றுவில் , கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் வோர்ட் இல. 11, மசங்கஸ் வீதியில் பழைய சோனகத் தெருவில் அமைந்த தற்சமயம் பழைய சோனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 177 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். டொன் டேவிட் தயாரித்த 1945, திசெம்பர் 29 திகதியிட்ட வரைபட இல. 3810 இல் விபரித்த குறித்த காணியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடத்துடனான காணித்துண்டு - வடக்கில் : வரிமதிப்பிலக்கம் 198, ஜீ/ 200, 202, 204, 206 மற்றும் ஜீ/ 210 நிலமனையும் புதிய சோனகத்தெருவும் ; கிழக்கில்: பழைய சோனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 181 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கில் : பழைய சோனகத்தெருவும் ; மேற்கில் : பழைய சோனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 173 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகநாதன் தயாரித்த 1980, ஓகத்து 18 திகதியிட்ட வரைபடம் இல. 2607 இன்படி பதினெட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 18பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப் பதிவகத்தில் ஏ 892/49 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. சின்னத்தம்பி தயாரித்த 1991, செத்தெம்பர் 26 திகதியிட்ட மிகவும் அண்மைய அளவை வரைபடம் இல. 3705 இன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்றுவில் , கொழும்பு மாநகர சபை நிர்வாக எல்லைகளுள் வோர்ட் இல. 11, மசங்கஸ் வீதியில் பழைய சோனகத் தெருவில் அமைந்த பழைய சோனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 177 ஐக் கொண்ட இடத்தில் அமைந்துள்ள கட்டிடங்களுடனான காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3705 இல் விபரித்த துண்டு ஏ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : சொனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 198, ஜீ/ 200, 202, 204, 206 மற்றும் ஜீ/ 210 உம் ; கிழக்கில்: பழைய சோனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 181 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கில் : பழைய சோனகத்தெருவும் ; மேற்கில் : பழைய சோனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 173 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3705 இன்படி பத்தொன்பது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 19பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எஸ். டி. சில்வா,
தொடர்பாடல் முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அறவிடல் - தொகுதி,
தலைமை அலுவலகம்,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1,
2008.04.22

5-560

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க , (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

### ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : 0230000607
கடனாளியின் முழுப்பெயர் : குரும்பலப்பிட்டியகே சந்தன மற்றும் பள்ளிமுல்ல கப்புகமகே ரம்யா ஜானகி

(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2008.01.18 ஆந் திகதிய, 1533 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2008.01.12 ஆந் திகதிய 'லக்பிம', ' ஜலண்ட்' மற்றும் 'தினக்குரல்' பத்திரிகைகளில் பிரசுரமான விதிமுறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும்) தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், இலக்கம் 220/5, கம்பஹா வீதி, யக்கல என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர்

டபிள்யூ. எம். விக்கிரமரத்ன என்பவரினால் 2008.06.26 ஆந் திகதி மு.ப. 10.00 மணியிலிருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற் கான (விசேஷட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தாழ் அறிவிக்கப்படுகின்றது.

அடமானப் பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று இருபத்தெட்டு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 2,09,228.89) 2007.07.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபி விருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

1. குறிப்பிட்ட ஆதனப் பிணையின் படி வங்கியால் அறவிட வேண்டிய குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான ஒரு இலட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்று முப்பத்தைந்து ரூபா நாற்பது சதத்தினையும் (ரூபா 1,60,635,40) 2007.07.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக நாற்பத்தெட்டா யிரத்து ஐநூற்று தொண்ணூற்று மூன்று ரூபா நாற்பத்தொன்பது சதத்தினையும் (ரூபா 48,593.49) இதன்படி மொத்தமாக இரண்டு இலட்சத்து ஒன்பதாயிரத்து இருநாற்று இருபத்தெட்டு ரூபா எண்பத்தொன்பது சதத்தினையும் (ரூபா 2,09,228.89) ;
2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து அறுபத்தாயிரத்து அறுநூற்று முப்பத்தைந்து ரூபா நாற்பது சதத்திற்கான (ரூபா 1,60,635.40) அறவிட வேண்டிய 15.50 வீதமான வருடாந்த வட்டியை 2007.08.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் உள்ள தொகையினை அறவீடு செய்வதற்கும் ;
3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதற்குமாகும்.

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குருகோரளை, தாசிய பத்துவவில் மினுவங்கொட பிரதேச சபை எல்லையில், நெடகமுவ கிராமத்தில் அமைந்துள்ள ஹிக்கஹவத்த என்ற காணிக்கு 1998.03.01 மற்றும் 1998.02.15 ஆந் திகதிகளில் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. என். சந்தகிரி என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 200 ஆம் இலக்க காணிவரைபடத்தின் படி காணித்துண்டிலக்கம் 01 இன் எல்லைகளாக வடக்கே : எல். பீ. ஜயவர்த்தன என்பவருக்குச் சொந்தமான காணியும் கிழக்கே : என். ஏ. பீட்டர் அப்புஹாமி என்பவருக்குநச் சொந்தமான காணியும் ; தெற்கே : பாதையும் ; மேற்கே : ஏ. டி. பிரேமதாச என்பவருக்குச் சொந்தமான காணியும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபத்து மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 23.5பே) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் கம்பஹா காணிப்பதிவுக் காரியாலயத்தில் ஏ 244/164 என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2008 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி.

5 – 637

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – நிட்டம்புவ கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**பெறுமதிமிக்க காணி (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, தாஸிய பற்று, மினுவாங்கொடை பிரதேச சபையின் மாபோதல உப அலுவலகத்தின் எல்லைகளுக்குள் நைவலவில் அமைந்துள்ளதும் "ஹியுரிகஹலந்த" என அழைக்கப் படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.கே.ஏ.எஸ்.பத்மினி அவர்களால் தயாரிக்கப் பட்டு, 2004, பெப்புருவரி 7 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1478 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டது மான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணி விஸ்தீரணம் : 3றூட்)**

(கடப்பாடுடையவரான ஜயசேகர முதியன்சலாகே சமிந்த ஜயசேகர, ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இன் சார்பில் கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்க அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு 2005, மே 25 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 4884 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ், மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை 2008, யூன் 19 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்கு**.–2007.03.09 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2007.03.20 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.– வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்:–

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் ஒரு வீதம் 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் கட்டணங்கள் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) மொத்த விளம்பரக் கட்டணங்களின் செலவுகள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தற் நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

உரித்து உறுதியையும் வேறு ஆவணங்களையும் பார்வையிடு வதற்காக, "கொழும்பு 10, ரீ. பி. ஜாயா மாவத்தை, 'எச்என்பி கோபுரங்கள்', 18 ஆம் மட்டம், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – முகாமையாளர் சட்ட சம்பந்தமானது (அறவீடுகள்)" உடன் தயவுசெய்து

தொடர்புகொள்ளவும். தொலைபேசி இலக்கங்கள் : 2661815, 2661819, 4764764.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் பட்டய ஏலதாரர்.

134, பெத்தகான வீதி,
கோட்டே,
தொலைபேசி இலக்கங்கள் : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

5-566

---

## றுஹுஈன அபிவிருத்தி வங்கி - எல்பிடிய கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏலவிற்பனை

றுஹுஈன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ் குறிப்பிட்ட சொத்துக்கள் 2008, யூன் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 11.30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்** :- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே பென்தர வலல்லாவிட கோரளே இஹல அமைந்துள்ள இலுக்கெடிய கெலே இலக்கம் 2 என்ற துண்டினால் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 4 எனும் துண்டினால் மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 4 எனும் நான்கு ஏக்கர் இருபத்தொரு பேர்ச்சஸ் (4ஏ. 0று. 21பே.) மிகப்பெரிய காணியும் அதற்கான அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள் உள்ளடக்கப் பட்டதாகும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2007.12.25 ஆந் திகதியின் அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2008.03.11 ஆந் திகதியின் "தினமின", "த ஐலண்ட்", "தினகரன்" எனும் சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- எல்பிட்டியிலிருந்து அம்பலன் கொட பாதையின் 2 கி. மீற்றர் அளவு செல்ல தென்படும் பெரகும் மாவத்தையின் 100 மீற்றர் சென்று இடப்பக்கமாக விழும் பாதையின் 25 மீற்றர் செல்ல இக்காணியை காணலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை** .- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ் கண்ட படி பணத்தை கொள்வனவாளரினால் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2%;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை உறுதிப் பத்திரத்திற்கான முத்திரை கட்டணம் ஆகும்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புரன அனகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள இல. 382ஏ எனும் நிலையத்திலுள்ள றுஹுஈன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது விடவும் மீண்டும் அச் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு. உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209, 091-2291163

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்

குருந்துவத்த,
வெல்கம, மாத்தறை.
தொலைபேசி : 041 - 2228731

5-603

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

### ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : 1900000732
கடனாளியின் முழுப்பெயர் : ஹேரத் முதியான்சேலாகே லேகா சாந்தனி ஹேரத்

"(இங்கு இதன் பிறகு "வங்கி" என்று அழைக்கப்படும்) 2003 ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2008.01.25 ஆந் திகதிய, 1534 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2008.02.15 ஆந் திகதிய, "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "தினக் குரல்" பத்திரிகைகளில் பிரசுரமான விதி முறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த

பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், இலக்கம் 22, பிரனாந்து மாவத்தை, டயஸ் கராஜ் கட்டிடம், நீர்கொழும்பு என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் டபிள்யூ. பீ. சி. பெரேரா என்பவரினால் 2008.06.23 ஆந் திகதி மு. ப. 11.30 மணியிலிருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.''

அடமானப் பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டு ரூபா இருபது சதம் (ரூபா 1,18,958.20) 2002.01.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட ஆதனப் பிணையின் படி வங்கியால் அறவிட வேண்டிய குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான எண்பத்தேழாயிரத்து நூற்று பதின்மூன்று ரூபா முப்பத்தொன்பது சதத்தினையும் (ரூபா 87,113.39) 2002.01.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக முப்பத்தோராயிரத்து எண்ணூற்று நாற்பத்து நான்கு ரூபா எண்பத்து ஒரு சதத்தினையும் (ரூபா 31,844.81) இதன்படி மொத்தமாக ஒரு இலட்சத்து பதி னெட்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டு ரூபா இருபது சதத்தினையும் (ரூபா 1,18,958.20) ;

2. குறிப்பிட்ட எண்பத்தேழாயிரத்து நூற்று பதின்மூன்று ரூபா முப்பத்தொன்பது சதத்திற்கான (ரூபா 87,113.39) அறவிட வேண்டிய 17 வீதமான வருடாந்த வட்டியினை 2002.02.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் உள்ள தொகையினை அறவீடு செய்வதற்கும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங் கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங் களை அறவீடு செய்வதற்குமாகும்.

### அட்டவணை

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பன்னல பிரதேச சபை எல்லையில் (மாகந்துர உப அலவலத்தில்), பிட்டிகல் கோரளையில், கட்டுகம்பொல ஹத்பத்துவ எலிவில கிராமத்தில் அமைந்துள்ள கொஹம்பகஹவத்த என்ற காணிக்கு 1996.11.13 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் சுமனரத்ன பீ. அபேகோன் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 4335 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 3 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லை களாக – வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டும் (10 அடி பாதைக்கான ஒதுக்கத்துடன்) ; கிழக்கே : 4 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : மூல காணியின் 2 ஆம் இலக்க காணித்துண்டு அல்லது டீ. எம். குலரத்ன என்பவரின் வாரிசுகளுக்குச் சொந்தமான காணியும் ; மேற்கே : 2 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு முப்பது பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 30பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையுடன் குளியாபிட்டிய காணிப்பதிவுக் காரி யாலயத்தில் S 67/153 என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2008. மே 13.

5 - 635

---

### இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கிகளி னால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

#### ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : 0114400360
கடனாளியின் முழுப்பெயர் : மொஹம்மது மௌஜுட் மொஹமட் ஹபீல்

(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆண்டின் 15 ஆம் இலக் க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2002.09.27 ஆந் திகதிய, 1256 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2002.09.27 ஆந் திகதிய, ''தினமின'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் பிரசுரமான விதி முறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், இலக்கம் 64, அருப்பொல, கண்டி என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரினால் 2008.06.25 ஆந் திகதி மு. ப. 11.00 மணியிலிருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.''

அடமானப் பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து எழுபத் தெட்டாயிரத்து இருநூற்று எண்பத்து மூன்று ரூபா (ரூபா 2,78,283.00) 2002.02.28 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டி யிருப்பதால்,

